## கீழக்கரை நகர்மன்ற 13.01.2021—ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

**பொருள் :1**

15—வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரை மான்யம் 2020—21 ஆம் ஆண்டு (Tied Grant to Non Million Plus Cities for the year 2020-21) முதல் மற்றும் இரண்டாம் தவணைகளின் மானியம் ஒதுக்கீடுகளுக்கு பணிகள் தேர்வு செய்து கருத்துரு அனுப்பி வைக்குமாறு மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக 29.12.2020—ந் தேதிய மின்னஞ்சல் (E-mail) மற்றும் தொலைபேசி செய்தியில் (Telephone message) தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்டவாறு பணிகள் தேர்வு செய்து பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு. இந்நகர்மன்றத்தில் 31.12.2020—ந் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இராமநாதபுரம் மாவட்ட நகராட்சிகளில் மறு சுழற்சி செய்ய இயலாத குப்பைகளைசேர்த்து கையாள புதிதாக தினசரி 30 மெட்ரிக் டன் கையாளத்தக்க வகையில் ஒரு எரியூட்டும் ஆலை (Dry Waste Generator) விகிதாச்சார அடிப்படையில் செலவினத்தை பகிர்ந்து கொள்ளும் வகையில் அமைத்தல். | 70.00 |
| 2. | இந்நகர் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று குப்பைகளைப் பிரித்து எடுத்து சேகரிக்க நான்கு சக்கர டிப்பர் ஆட்டோ ஒரு எண்ணம் வாங்குதல். | 6.75 |
| 3. | இந்கராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 மேலத்தெரு வளாகத்தில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி (OHT) அமைக்கப்படவுள்ள இடத்தில் சுற்றுச் சுவர் கட்டும் பணி. | 12.75 |
| | மொத்தம் | 89.50 |

அதனை தொடர்ந்து, மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக 13.01.2021—ந் தேதிய தொலைபேசி செய்தியில் (Telephone Message) தெரிவித்துள்ளதன்படி, 2020—21ம் ஆண்டு 15—வது நிதிக்குழு மான்யம் (Tied Grant) கீழ் ரூ.89.50 லட்சத்திற்கு பொறியாளர்களால் திருத்திய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இராமநாதபுரம் மாவட்ட நகராட்சிகளில் மறு சுழற்சி செய்ய இயலாத குப்பைகளைசேர்த்து கையாள புதிதாக தினசரி 30 மெட்ரிக் டன் கையாளத்தக்க வகையில் ஒரு எரியூட்டும் ஆலை (Dry Waste Generator) விகிதாச்சார அடிப்படையில் செலவினத்தை பகிர்ந்து கொள்ளும் வகையில் அமைத்தல். | 74.40 |
| 2. | இந்நகர் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று குப்பைகளைப் பிரித்து எடுத்து சேகரிக்க நான்கு சக்கர டிப்பர் ஆட்டோ ஒரு எண்ணம் வாங்குதல். | 6.75 |
| 3. | இந்கராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 மேலத்தெரு வளாகத்தில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி (OHT) அமைக்கப்படவுள்ள இடத்தில் சுற்றுச் சுவர் கட்டும் பணி. | 8.35 |
| | **மொத்தம்** | **89.50** |

**(கோப்பு எண். 610/2020/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. வ.எண்.1–ல் கண்டுள்ள மத்திய அரசின் 15–வது நிதிக்குழு முதல் மற்றும் இரண்டாவது மான்ய தொகையில் இராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த நகராட்சிகளில் மறு சுழற்சி செய்ய இயலாத குப்பைளை சேர்த்து 30 மெட்ரிக் டன் கையாளத்தக்க வகையில் ஒரு எரியூட்டும் ஆலை (Dry Waste Generator) அமைக்கும் பணி மேற்கொள்ளவும், அதற்கான இயக்குதல் மற்றும் தொடர் பராமரிப்பு பணியினை கீழக்கரை நகராட்சியின் கண்காணிப்பில் மேற்கொள்ளவும், மேற்படி மாதாந்திர பராமரிப்பு கட்டணத்தை இராமநாதபுரம் மாவட்ட நகராட்சிகள் விகிதாச்சார அடிப்படையில் செலவினத்தை பகிர்ந்து கொள்ளும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு உரிய வழிமுறையாக கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. வ.எண்.3–ல் கண்டுள்ள பணிகளுக்குரிய திருத்திய மதிப்பீடுகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.820 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் :2</u>

கீழக்கரை நகராட்சியில் தினசரி 18 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் சேகரமாகின்றன. அதில் தரம் பிரிக்கப்பட்ட 11 மெட்ரிக் டன் அளவிலான மக்கும் குப்பைகள் (Bio degradable Waste) நகரின் பல பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 1 எண்ணிக்கையிலான பசுமை உரக்குடில் (Micro Composting Centre) மற்றும் 6 எண்ணிக்கையிலான சிறிய வகை உரக்குடிலிகள் மூலமாக (Onsite Composting centre) கையாளப்பட்டு உரமாக்கப்படுகின்றன. இதுதவிர சுமார் 7 மெட்ரிக் டன் அளவுள்ள குப்பைகள் மறு சுழற்சி அடிப்படையில் பயன்படுத்தத்தக்க உலர் கழிவுகள் (Recyclable dry waste) பிரித்தெடுக்கப்பட்டு மறு சுழற்சி செய்யப்பட்டு வருகிறது. மேலும், மறு சுழற்சிக்கு பயன்படுத்த இயலாத மற்றும் விற்பனை செய்ய இயலாத (Non Saleable Dry Waste) சுமார் 5.5 மெட்ரிக் டன் அளவுள்ள உலர் கழிவுகள் எரிபொருளாகப் பயன்படுத்த வேண்டி M/s. Dalmia, சிமெண்ட் நிறுவனத்திற்குச் சொந்தமான சிமெண்ட் ஆலைக்கு அனுப்பப்பட்டு வந்தது. மேற்படி நகராட்சியால் அனுப்பப்பட்டுவரும் குப்பைகளை எரிபொருளாக பயன்படுத்த இயலாதவை, ஈரமாக உள்ளது மற்றும் மேற்படி உலர் கழிவுகளை சரியாக தரம் பிரிக்கப்படவில்லை உள்ளிட்ட இதர காரணங்களை தெரிவித்து சிமெண்ட் ஆலை வாங்க மறுக்கும் நிலையில் மக்காத குப்பைகள் மறுபடியும் குப்பைக் கிடங்கிலேயே மீண்டும் சேகரம் செய்யும் நிலை ஏற்படுகிறது. இது தவிர நகரை விட்டு வெகு தூரத்தில் அமைந்துள்ள மேற்படி தனியார் சிமெண்ட் ஆலைகளுக்கு பயன்படுத்த இயலாத விற்பனை செய்ய இயலாத உலர் கழிவுகளை கொண்டு செல்ல லாரி வாடகையாக சுமார் ரூ.16000/– வரை செலவிட நேர்வதால் நகராட்சிக்கு கூடுதல் செலவினம் ஏற்படுகின்றது. மேற்படி பயன்படுத்த இயலாத மற்றும் விற்பனை செய்ய இயலாத (Non Saleable Dry Waste) உலர் கழிவுகளை சிமெண்ட் ஆலைகளுக்கு கொண்டு சென்று எரியூட்டுவதற்குப் பதிலாக நகராட்சி மூலம் புதிதாக எரியூட்டும் உலை நிறுவி மேற்படி குப்பைகளை எரிபொருளாக பயன்படுத்தி விஞ்ஞான ரீதியில் கையாள (Dry Waste Incinerator) வேண்டிய நிலை உள்ளது. மேலும், இத்திட்டத்னை செயல்படுத்த கூடுதல் தொகை செலவிட நேரிடும் என்பதால் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த இந்நகராட்சியையொட்டி அமைந்துள்ள இராமநாதபுரம், பரமக்குடி, மற்றும் இராமேஸ்வரம் நகராட்சிகளில் மறு சுழற்சி செய்ய இயலாத குப்பைகளையும் சேர்த்து கையாள புதிதாக தினசரி 30 மெட்ரிக் டன் கையாளத்தக்க வகையில் ஒரு எரியூட்டும் ஆலை (Dry Waste Generator)யை தனியார் பங்களிப்பு அடிப்படையில் (Public Private Partnership Mode) செயல்படுத்தவும் அதற்கான திட்ட மதிப்பீடு <u>ரூ.350.00</u> இலட்சத்துக்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேலும் செலவினத்தை கீழ்க்கண்ட வகையில் இத்திட்டதின் கீழ் பங்கெடுத்துக்கொள்ளும் நகராட்சிகள் பகிர்ந்து கொள்ளத்தக்க வகையில் இத்திட்டத்தினை செயல்படுத்தவும், திட்டத்தினை செயல்படுத்திட கீழக்கரை நகராட்சியின் பங்குத் தொகை ரூ.70.00 இலட்சத்திற்கு 31.12.2020–ந் தேதி மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | நகராட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு இலட்சத்தில் | பங்குத் தொகை இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | கீழக்கரை | ரூ.350.00 | 70.00 |
| 2 | இராமநாதபுரம் | | 80.50 |
| 3 | பரமக்குடி | | 140.00 |
| 4 | இராமேஸ்வரம் | | 59.50 |
| | | **மொத்தம்** | **350.00** |

மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக 13.01.2021–ந் தேதிய தொலைபேசி செய்தியில் (Telephone Message) தெரிவித்துள்ளபடி இராமநாதபுரம் மாவட்ட நகராட்சிளில் மறு சுழற்சி செய்ய இயலாத குப்பைகளைசேர்த்து கையாள புதிதாக தினசரி 30 மெட்ரிக் டன் கையாளத்தக்க வகையில் ஒரு

எரியூட்டும் ஆலை (Dry Waste Generator) கீழ்கண்ட விகிதாச்சார அடிப்படையில் செலவினத்தை பகிர்ந்து கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | நகராட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு இலட்சத்தில் | பங்குத் தொகை இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | கீழக்கரை | ரூ.372.00 | 74.40 |
| 2 | இராமநாதபுரம் | | 85.56 |
| 3 | பரமக்குடி | | 148.80 |
| 4 | இராமேஸ்வரம் | | 63.24 |
| | | **மொத்தம்** | **372.00** |

மேலும், மேற்படி எரியூட்டு உலை நிறுவியவுடன் கீழக்கரை நகராட்சியில் உருவாகும் மக்காத குப்பைகளை இயக்குதல் மற்றும் தொடர் பராமரிப்பு பணியினை கீழக்கரை நகராட்சியின் கண்காணிப்பில் மேற்கொள்ளவும், மேற்படி மாதாந்திர பராமரிப்பு கட்டணத்தை விகிதாச்சார முறையில் பகிரிந்து செலுத்தி இத்திட்டத்தினை செயல்படுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண். 610/2020/இ1)**

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மேற்படி திட்டத்தினை மத்திய அரசின் 15—வது மத்திய நிதிக்குழு மான்ய தொகையிலிருந்து செயல்படுத்தவும் இராமநாதபுரம் மாவட்ட நகராட்சிகள் விகிதாச்சார அடிப்படையில் செலவினத்தை பகிர்ந்து கொள்ளவும், தொடர் பராமரிப்பினை தனியார் மூலம் செயல்படுத்துவதை கீழக்கரை நகராட்சி கண்காணிப்பில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண்.821 அனுமதிக்கப்பட்டது.</u>**

**ஒம்/— ஆ. தனலெட்சுமி,பி.காம்**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)**
**கீழக்கரை நகராட்சி.**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர் (பொ)**
**கீழக்கரை நகராட்சி.**